பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 27 | திங்கட்கிழமை | 13.11.2023 | அதிர்வு 104

## மண்சரிவில் சிக்கி நான்கு பேர் மாயம்

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

பலாங்கொடை, கவராஙன்ஹேன பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மண்சரிவில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் 2 மகள்கள் காணாமல்போயுள்ளனர். 06▶

# ஜனநாயக சுதந்திரத்துக்கு இலங்கையில் பேராபத்து!

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ரோமில் வைத்து அபாய எச்சரிக்கை

இலங்கை அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் அத்தகைய சந்தேகத்துக்கு உள்ளாகும் நபர்கள் மீது குற்றஞ்சாட்டுவதற்கான அதிகப்படியான அதிகாரங்கள் வழங்கப்படுவது மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது எனவும், இதுபோன்ற பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்கள் நீதி மற்றும் ஜனநாயகத்துக்கு உண்மையான ஆபத்தை விளைவிக்கக் கூடியவை எனவும் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். 06▶





## இந்த அரசுக்கு எதிராக பொது எதிரணி உதயம்

### டலஸ் எம்.பி. தகவல்

இந்த அரசுக்கு எதிராகப் பொது எதிர்க்கட்சி இன்று உருவாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“தேர்தல் நெருங்கும்போது பொதுவானநோக்கத்துக்காகஎதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்த சந்தர்ப்பங்கள் பல வரலாற்றில் உண்டு.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது சரத் பொன்சேகாவைஆதரிப்பதற்காகத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 06▶



## 2024 ஆம் ஆண்டுக்கான பட்ஜட் இன்று சமர்ப்பிப்பு

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட அறிக்கை இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நிதி அமைச்சர் என்ற வகையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தின் இறுதிக் கட்ட தயாரிப்பு மற்றும் சமர்ப்பிப்பு தொடர்பாக தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி கலந்துகொண்டார். (விரிவான செய்தி 15ஆம் பக்கத்தில்)

## மன்னாரில் சீன உதவியுடன் மீனவருக்கு இறங்குதுறை!

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டம், பேசாலையில் மீனவருக்கான இறங்குதுறை ஒன்றை சீன அரசின் நிதி உதவியில் புனரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் தலைமன்னார் பகுதியில் கடற்படையினரின் முகாமுடன் கூடிய இறங்குதுறை புனரமைக்கப்பட்டு இராமேஸ்வரம் - மன்னார் பயணிகள் போக்குவரத்து மற்றும் பொருள்கள் சேவைக்கு பயன்படுத்தப்பட இருக்கின்றது.

அதேநேரம் மன்னாரில் மீனவர் இறங்குதுறை ஒன்றை அமைக்கும் வகையிலும் திட்டமிடப்படுகின்றது. இதற்காகவே பேசாலை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே 07▶



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நீண்ட இழுபறிக்கு பின்னர் - சுமார் நான்கரை ஆண்டுகள் கழித்து - அடுத்த ஜனவரியில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றமை குறித்து இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன்.

‘தாயைப் போல பிள்ளை; நூலைப் போல சேலை’ என்பர். தாய்க் கட்சியைப் போலவே அதன் ஒரு கிளையின் கூட்டமும் இப்போது கூட்டப்படுகின்றது. கட்சியின் 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# ஜனாதிபதி அலுவலகத்தில் தீபாவளிக் கொண்டாட்டம்







உலகெங்கிலும் உள்ள இந்துக்களால் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விசேட தீபாவளிக் கொண்டாட்ட நிகழ்வு இடம்பெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கொண்டாட்டம் இந்து சம்பிரதாயங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு மிகவும் எளிமையாகவும் நேர்த்தியாகவும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதிக்கு இந்து சமய கலாச்சார முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரம்சிங்க, நிகழ்வில் கலந்து கொண்ட இந்துக்களுக்கு தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்தமையோடு அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் மற்றும் விசேட விருந்தினர்கள், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உட்பட ஜனாதிபதி அலுவலக உயர் அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# நெருக்கடியைப் பயன்படுத்தி தேசிய சொத்துகள் விற்பனை

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



லிட்ரோ மற்றும் மில்கோ நட்டமடையும் நிறுவனங்கள் அல்ல. நெருக்கடியைப் பயன்படுத்தி எம்மால் இதனைச் செய்ய முடியாது என கூறி, தேசிய சொத்துக்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யும் திட்டத்தை முன்னெடுத்துள்ளனர் என்று மேலவை இலங்கை கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

தேசிய சொத்துக்கள் விற்பனை செய்யப்படுகின்றமை, அதிகரித்துள்ள வாழ்க்கைச்செலவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தெளிவுப்படுத்தும் மாநாடொன்றை மேலவை இலங்கை கூட்டணி கொழும்பில் ஏற்பாடு செய்திருந்திருந்தது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது விமல் வீரவன்ஸ் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

லிட்ரோ நிறுவனம் நட்டமடையும் நிறுவனமொன்று அல்ல. அந்த நிறுவனத்தினால் 600 கோடி ரூபா திறைசேரிக்கு வழங்கப்படுகிறது. இருப்பினும் அந்த நிறுவனத்தையும் தற்போது தனியாருக்கு விற்பனை செய்யப் பார்க்கின்றனர். மின்சக்தி நிறுவனங்கள் விற்பனை செய்யப்படும் செயற்பாடு நாட்டின் அரசியல் இருப்பை கேள்விக்குறியாகியுள்ளது. சமையல் எரிவாயு கொள்கலன் வெடிப்புச் சம்பவங்கள் கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்குச் செல்வதற்கு வித்திட்ட பிரதான காரணியாக அமைந்தது.

இருப்பினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்ததன் பின்னர் ஒரு சமையல் எரிவாயு கொள்கலனும் வெடிக்கவில்லை அல்லவா? தேவை ஏற்பட்டால் வெடிக்க வைக்க முடியும். மில்கோ நிறுவனமும் நட்டமடையும் நிறுவனம் அல்ல. நெருக்கடியைப் பயன்படுத்தி தேசிய சொத்துக்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யும் திட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

அது தொடர்பில் எம்மால் திருப்தியடைய முடியாது எம்மால் இதனைச் செய்ய முடியாது என கூறி தனியாருக்கு வழங்குகின்றனர். மூன்று தசாப்தங்களாக நீடித்த யுத்தத்தை எம்மால் வெற்றிக்கொள்ள முடியும் என்றால் இந்தப் பொருளாதார நெருக்கடிகளிலிருந்தும் எம்மால் மீண்டெழ முடியும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தீர்மானமிக்க ஒன்றாகும். மேலவை இலங்கைக் கூட்டணி தீர்மானமிக்கதும், தெளிவானதுமான கொள்கைகளை வகுத்து ஜனாதிபதித் தேர்தலுக்கு முகங்கொடுக்கும். தோல்வியடைந்த மற்றும் நாடு தொடர்பில் எந்தவொரு பற்றும் இல்லாதவர்கள் மூலம் நாட்டுக்கு பாரிய அழிவு மாத்திரமே ஏற்படும். - என்று அவர் தெரிவித்துள்ளார்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# கீரி சம்பாவிற்கு தட்டுப்பாடு இல்லை அமைச்சர் மஹிந்த அமரவீர தகவல்



நாட்டில் கீரி சம்பா அரிசிக்கு எந்தத் தட்டுப்பாடும் கிடையாது. அரிசி மாபியாக்கள் செயற்கையாக மேற்கொண்ட செயற்பாடுகளே சந்தையில் கீரி சம்பாவுக்கான தட்டுப்பாட்டுக்கு காரணமாகும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சந்தையில் கீரி சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் செய்தி தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் தேவையான அளவு கீரி சம்பா அரிசி கையிருப்பில் இருக்கின்றபோதும் சில அரிசி ஆலை உரிமையாளர்கள் அதனை பதுக்கி வைத்துக்கொண்டு சந்தைக்கு விநியோகிப்பதை மட்டுப்படுத்திக்கொண்டுள்ளனர்.

அதன் காரணமாகவே கீரி சம்பாவிற்கு சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இது அரிசி மாபியாக்களினால் செயற்படுத்தப்படும் செயற்கை தட்டுப்பாடாகும்.

கடந்த சிறுபோகத்தில் கீரிசம்பா அறுவடை குறைவடைந்திருந்த போதும் அதற்கு முன்னர் பெரும்போகத்தில் மேற்கொள்ளப்பட்ட அறுவடையின் போது பெருமளவு கீரி சம்பா கிடைத்துள்ளது.

அதனால், போதுமான வகையில் கீரிசம்பா கையிருப்பில் இருக்கிறது. அத்துடன் இம்முறை பெரும்போகத்தின் போதும் அதிகமாக கீரி சம்பா உற்பத்தி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். – என்று தெரிவித்துள்ளார்.

# புத்தளம் ரயில் சேவை மீண்டும் இன்று ஆரம்பம்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – கொழும்பு பயணிகள் ரயில் போக்குவரத்துச் சேவைகள் எட்டு நாள்களின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

புத்தளம் – கொழும்பு ரயில் மார்க்கத்தில் பத்துளு ஓயா பிரதேசம் வெள்ளத்தினால் மூழ்கியதன் காரணமாக கொழும்பு – புத்தளம் வரையிலான ரயில் சேவைகள் கடந்த 4ஆம் திகதி முதல் பங்கதெனிய ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

பத்துளு ஓயா ரயில் நிலையம் மற்றும் ரயில் தண்டவாளம், அதனை அண்டிய ரயில் தண்டவாளம், பிரதான வீதி உள்ளிட்ட பகுதிகளில் வெள்ள நீர் காணப்பட்டது.

ரயில்வே திணைக்கள ரயில் பாதையை சுத்தப்படுத்தும் ஊழியர்களால் தண்டவாளத்தில் காணப்பட்ட வெள்ளநீர் வெளியேற்றப்பட்டு, ரயில் பாதை சீரமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இன்று திங்கட்கிழமை முதல் புத்தளம் ரயில் நிலையம் முதல் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் வரையிலான அனைத்து ரயில் சேவைகளும் வழமை போல நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளத்தில் இருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையம் வரை நாளாந்தம் நான்கு தடவைகள் ரயில் சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

புத்தளத்தில் இருந்து அதிகாலை 4 மணிக்கும், காலை 7.40 மற்றும் 11.55 மாலை 5.10 மணியளவில் இந்த ரயில் சேவைகள் கொழும்பு நோக்கி மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில் திடீரென ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டமையால் நாளாந்தம் ரயிலில் போக்குவரத்து செய்யும் புத்தளம் , பாலாவி, மதுரங்குளி மற்றும் முந்தல் உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கி வந்துள்ளனர்.



## RUHBINS HOSPITAL (PVT) LTD.

NO. 160, POINT PEDRO ROAD, NELLIYADY, JAFFNA.

### NOVEMBER 14

# WORLD DIABETES DAY

# DIABETES IS A SILENT KILLER

| Approximately 463 M + From the World Population | Over 2 M Sri Lankans are Diabetes | Every 6 seconds One person dies due to Diabetes |
|---|---|---|



## Access to Diabetes Care

### WELLNESS PACKAGE

- HBA1C
- Fasing/ Random Blood Sugar
- Total Cholesterol
- Creatinine & eGFR
- Blood Pressure
- BMI Assessment
- Consultation with Medical Officer
- Advice on Lifestyle Modification

**Special Offer**

**Rs. 5,500/-**

Offer valid till Dec 14th

Hotline: +94772486642

உங்கள் அன்பிற்குரியவரை நீரிழிவு பரிசோதனை செய்துகொள்ள சொல்லுங்கள், அது அவர்களின் உயிரை பாதுகாக்கும்.

Ruhbins Hospital

No. 160, Pointpedro Road, Nelliyadi, Jaffna

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மாநாடு என்றதும் அதன் கொழும்புக் கிளையின் கூட்டமும் ஒருவாறு மூன்று, நான்கு ஆண்டுகள் கழித்து இன்று கூட்டப்படுகின்றது.

ஆக ஒரு நாள் முன்னறிவித்தலோடு, இன்று மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி தொடர்மாடிக் கட்டமைப்பில் அமைந்துள்ள ஒன்று கூடல் மையத்தில் கூட்டம் நடைபெறுவதாகத் தெரிகிறது. நிகழ்ச்சி நிரல் என்னவென்பது எனக்கு தெரியாது.

கூட்ட விவரம், பெறுபேறுகள் கிடைத்தால் நாளையோ, மறுநாளோ அதன் விவரத்தைப் பார்ப்போம்.

\+ \+ \+

கொழும்பு அரசியலில் இன்று முக்கியமான ஒரு நாள்.

ஒருபுறம் பட்ஜெட். அது நண்பகல் 12 மணிக்குத் தொடங்குகின்றது.

மறுபுறம் 'இலங்கைக் கிரிக்கெட்' அமைப்புத் தொடர்பான வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இன்று பெரும்பாலும் திரும்பவும் எடுத்துக் கொள்ளப்பட வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

'இலங்கைக் கிரிக்கெட்' நிர்வாகத்தை இடைநிறுத்தி, அதற்கு மாற்றாக இடைக்கால நிர்வாகம் ஒன்றை உருவாக்கி, விளையாட்டுத் துறை அமைச்சர் விடுத்த உத்தரவுக்குக் கடந்த வாரம் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது.

அந்த இடைக்காலத் தடை உத்தரவு விவகாரமே பெரும்பாலும் இன்று அதே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்த இடைக்காலத் தடை உத்தரவை விதித்த மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசரின் பெயர் இவ்விடயத்துக்காக நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளியன்று பிய்த்து உதறப்பட்டமை தெரிந்ததே. அப்படித் தமது பெயர் நாடாளுமன்றத்தில் மோசமாக விமர்சிக்கப்பட்ட நிலையில் –

இலங்கைக் கிரிக்கெட் அமைப்பை விளையாட்டுத் துறை அமைச்சர் தடை செய்து விடுத்த உத்தரவை ஏற்று அங்கீகரிக்குமாற்போல முழு நாடாளுமன்றமுமே இலங்கைக் கிரிக்கெட் நிர்வாகத்திற்கு எதிராக ஏகமனதான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ள பின்புலத்தில் –

விளையாட்டுத்துறை அமைச்சரின் உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்த மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசர் அந்த வழக்கைத் தொடர்ந்து இன்று விசாரிப்பாரா? அல்லது இந்த வழக்கின் விசாரணையினின்றும் தாம் ஒதுங்கிக் கொள்கிறேன் என்று அறிவிப்பாரா? – என்பது தெரியவில்லை.

'நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமன்றி, நிலை நாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்.'

இந்த வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசரின் பெயர் நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற கவசத்தின் பின்னால் நாறடிக்கப்பட்டுள்ள சூழலில், அவர் காத்திரமாகச் செயற்பட்டு, நீதி நாட்டப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

என்ன செய்வார்? பொறுத்திருந்து பார்ப்போம்.

## இந்த அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட எதிர்க்கட்சிகளுடன் கைகோர்த்து. மேடையில் ஏறியது.

2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன போட்டியிட்ட சந்தர்ப்பத்தில் கூட இவ்வாறு இடம்பெற்றது. இவ்வாறு பல சந்தர்ப்பங்கள் வரலாற்றில் உள்ளன." – என்றார்.

## ஜனநாயக சுதந்திரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அண்மையில் வத்திக்கானில் நடைபெற்ற Ad Limina Apostolorum என்னும் திருத்தந்தையுடனான ஆயர்கள் சந்திப்பை முன்னிட்டு ரோமுக்கு வருகை தந்த கொழும்பு பேராயர் இலங்கையின் தற்போதைய நிலை குறித்து பீதேஸ் என்னும் கத்தோலிக்க செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய பேட்டியின்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அண்மைய ஆண்டுகளில் இலங்கை அரசியல், சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வரும் சூழலில் நாட்டின் நிலைமையில் எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும், மக்களிடையே அமைதியற்ற சூழலையும் அதிருப்தியையும் உருவாக்கும் நோக்கத்தில் கடுமையான சமூகக் கட்டுப்பாட்டு முறைகள் அறிமுகப் படுத்தப்படுகின்றன என்றும் பேராயர் கூறியுள்ளார்.

நாட்டில் ஜனநாயக சூழலை உருவாக்கவும் சாதாரண நிலைமைகளை நடைமுறைப்படுத்தவும் கடுமையான இடையூறுகளை அனுபவித்து வருவதாகத் தெரிவித்துள்ள கர்தினால், பாதிக்கப்படும் கத்தோலிக்க மக்கள் மட்டுமல்லாது ஒட்டுமொத்த இலங்கை நாட்டில் வாழும் மக்களையும் நினைவுகூர்வதாக எடுத்துரைத்துள்ளார்.

## மண்சரிவில் சிக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவர்களைத் தேடும் பணியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

# மரண அறிவித்தல்



## தர்மேஸ்வரி சச்சிதானந்தம்

மலேசியா Segambut ஐப் பிறப்பிடமாகவும், யாழ். உடுவில்கிழக்கு வேதாரணியர் வளவு, கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தர்மேஸ்வரி சச்சிதானந்தம் அவர்கள் 08-11-2023 புதன்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சுகிர்தம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான முருகேசம் பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற சச்சிதானந்தம் (Retired RMP) அவர்களின் அன்பு மனைவியும்,கௌரி (நோர்வே), சக்திகுமார்(கனடா), சுபத்திரா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலகுமார்(நோர்வே), தர்மினி(கனடா), விஜயகுமார்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நீரஜா, தனுஜன், பிறேமித்தா, நர்மிதா, விதுஷா, ஆனந் ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,ஆதி, ஆரியா, சத்தியா ஆகியோரின் அன்புப் பூட்டியும்,காலஞ்சென்றவர்களான ஜெகநாதன், ராமகிருஷ்ணா, விநாயகமூர்த்தி மற்றும் ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, சரஸ்வதி மற்றும் நிசங்காதேவி, காலஞ்சென்றவர்களான பாலசந்திரன், ஒப்பிலாமணி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.அன்னாரின் பூதவுடல் 13-11-2023 திங்கட்கிழமை அன்று மு.ப 08:30 மணியளவில் காலிவீதி கல்கிசையிலுள்ள மகிந்த மலர் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ந.ப 12:00 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் பி.ப 02:00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தகவல்:-குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு**

கௌரி பாலகுமார் – மகள் +4745242084,
சக்திகுமார் – மகன் +14168041583,
சுபத்திரா விஜயகுமார் – மகள் +447835612570

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பாடம் படிப்பார் ரணில்

அனுபவமே நல்லாசான். பட்டறிவில் படித்துத் திருந்தாதவன் மீண்டெழப் போவதில்லை.

'இயற்கை எனது நண்பன். வாழ்க்கை எனது தத்துவாசிரியன். வரலாறு எனது வழிகாட்டி' - என்றார் தலைவர் பிரபாகரன்.

வரலாற்றிலிருந்து - அனுபவத்திலிருந்து - பட்டுத் தெளியாதவன் உருப்படப் போவதில்லை.

இலங்கை அரசியலுக்கும் இது முக்கியமானது. ஆனால் பல அரசியல் தலைவர்கள் அனுபவப் பாடத்தை மறந்து விடுகிறார்கள். வரலாறு அவர்கள் நினைவில் நிற்பதில்லை. அதுவும் குறிப்பாக அதிகாரம் கைக்கு வந்ததும் இந்த அனுபவப் பாடங்கள் பெரும்பாலும் மறந்தே போய்விடுகின்றன.

இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இதற்கு விதிவிலக்கல்லர். அதிகாரம் கைக்கு வந்ததும் ஜனநாயகம் அவருக்கு மறந்து விட்டது.

இலங்கையின் நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவி தமக்கு வாழ்க்கையில் கிட்டவே கிட்டாது என்று தெளிவு பிறந்தமையினாலோ என்னவோ நேரத்துடனேயே அந்த ஆட்சி முறைமையை ஒழிக்க முன்னின்று குரல் எழுப்பியவர் அவர்.

ஆனால், நினையாப் பிரகாரமாக அவரே எதிர்பாராத அந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவி அவர் மடியில் விழுந்ததும், பழையவற்றையெல்லாம் அவர் மறந்து விட்டார். ஜனநாயகத்தின் மாண்பு இப்போது அவருக்கு நினைவில் இல்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 69 லட்சம் என்ற பெருவாரி எண்ணிக்கை வாக்குகளை அளித்து யாரை நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவிக்கு மக்கள் கொண்டு வந்தனரே அவரை அந்த மக்களே துரத்தியடித்து விட்டனர். இப்போது நடைமுறையில் இருக்கும் நாடாளுமன்றமும் மக்களின் ஆணையை இழந்து விட்டது என்பது வெளிப்படையானது.

மக்கள் ஆணையை இழந்த நாடாளுமன்றத்தையும், அந்த நாடாளுமன்றம் தெரிவு செய்த ஜனாதிபதிப் பதவியையும் வைத்துக்கொண்டு அதிகார ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க.

மக்கள் ஆணை இழக்கப்பட்டமையால் உடனடியாக ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகியன காலதாமதமின்றி நடத்தப்பட்டிருக்க வேண்டும். மக்கள் ஆணை பெற்ற தரப்புகளிடம் அந்த அதிகாரங்கள், பதவிகள் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனாலும் அதைச் செய்யாமல் குறுக்கு வழியில் நிறைவேற்றதிகாரத்தை பிரயோகித்து, ஆண்டனுபவித்துக் கொண்டிருக்கின்றார் ரணில்.

தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்தாமல், அதிகாரத்தை வைத்துத் தந்திரோபாயம் பண்ணியோரின் கதி பற்றிய அனுபவப் பாடத்தை அவர் அடியோடு மறந்து விட்டார் போலும்.

1970 பொதுத் தேர்தலில் பெரு வெற்றி பெற்றுப் பிரதமரானார் சிறிமாவோ பண்டாரநாயக்கா. அவருக்குத் தமது வாக்குகள் மூலம் மக்கள் அளித்த ஆணை ஐந்து ஆண்டுகளுக்கு. ஆனால் புதிய குடியரசு யாப்பைக் கொண்டு வருகின்றேன் என்ற பெயரில் அதைப் பயன்படுத்தி தமது அரசின் பதவிக்காலத்தை 1977 வரை - இரண்டு ஆண்டுகள் மேலதிகமாக - அவர் நீடித்தார்.

அந்தத் தவறுக்காக அவரது சுதந்திரக் கட்சி அடுத்த ஆட்சி அமைக்கும் வெற்றிக்காக கால் நூற்றாண்டு காலம் காத்திருக்க வேண்டி வந்தது.

இப்போது கிடைத்த நிறைவேற்றதிகாரத்தை ஆண்டனுபவிக்கும் சுவைக்காக, மக்கள் ஆணையை இழந்த பதவியில் தேர்தலை நடத்தாமல் காலத்தை ஓட்டுகின்றார் ரணில்.

மூத்த தலைவர்களான இரா.சம்பந்தன், சந்திரிகா குமாரதுங்க, பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித் போன்றோர் முன்வைத்த தேர்தல் நடத்தும் கோரிக்கையை உதாசீனப்படுத்தி, புறம் ஒதுக்கி நடக்கும் ரணில் அந்தத் தவறுக்கான பாடத்தை விரைவில் படிப்பார்.

## மன்னாரில் சீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உலக வங்கி நிதியில் பேசாலையில் ஒரு இறங்குதுறை அமைக்க முற்பட்ட சமயம் அப்பகுதியில் எதிர்ப்பு ஏற்பட்டமை போன்று இம்முறையும் எதிர்ப்பு ஏற்பட்டால் மாற்று இடமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக மாட்டீன் என்பவருக்குச் சொந்தமான பாடு உள்ள பிரதேசத்தில் காணப்படும் இரும்புக் கேடர் பாலத்தை புனரமைக்கும் நோக்கில் அண்மையில் அது உரிய தரப்பால் பார்வையிடப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்த இரு இறங்குதுறைகளில் ஒன்று சீனப் பங்களிப்பில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது என்று தற்போது தெரிவிக்கப்படுகின்றது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்."

- நி.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)



# வவுனியாவில் நேற்று இடம்பெற்ற அரசின் தேசிய தீபாவளி நிகழ்வு!









அரசாங்கத்தின் தேசிய தீபாவளி நிகழ்வு வவுனியாவில் நேற்று மாலை இடம்பெற்றது.

வவுனியா, கந்தசாமி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து இந்நிகழ்வு கந்தசாமி ஆலய பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

கந்தசாமி ஆலயத்தில் மேளதாளம் முழங்க விசேட பூஜை வழிபாடு இடம்பெற்றன். அங்கிருந்து இறைவனின் திருவுருவச் சிலையுடன் அதிதிகள் அழைத்து செல்லப்பட்டனர். மண்டபத்தில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நாட்டிய, நடன, நாடக நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அனுப்பி வைக்கப்பட்ட வாழ்த்துச் செய்து வாசிக்கப்பட்டது. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், வடமாகாண ஆளுனர் பி.எஸ்.எம்.சாள்ஸ், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேன, தபால் அத்தியட்சகர் றுவான் சரத்குமார, மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், ஆலய நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தேசியத் தீபாவளியை முன்னிட்டு நேற்று வவுனியாவில் தபால் முத்திரை வெளியீடு




வவுனியா, நவம்பர் 13


தேசியத் தீபாவளி தினத்தை முன்னிட்டு வவுனியாவில் தபால் முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டது.

வவுனியா, கந்தசாமி ஆலய பிரதான மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்ற தேசிய தீபாவளி நிகழ்வில் வைத்து இந்தத் தபால் முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்துக்களின் தீபாவளி தினத்தை முன்னிட்டு இத்தபால் முத்திரையை இலங்கைத் தபால் திணைக்கள அத்தியட்சகர் றுவான் சரத்குமார வெளியிட்டு வைக்க, முதல் முத்திரையை இந்து காலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து அதிதிகளாக கலந்து கொண்ட கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாக கு.திலீபன், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர ஆகியோருக்கு தபால் முத்திரை வழங்கி வைக்கபட்டது. மதகுருமாருக்கும் வங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை தபால் திணைக்கள அத்தியட்சகருடன் வடமாகாண தபால் திணைக்கள அத்தியட்சகர் மதுமதி வசந்தகுமாரி மற்றும் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



# இன்று நிறைவடையும் கேதார கௌரி விரதம்

- ஆர்.நடராஜன் ஹரன் -

கேதார கௌரி விரதம் சர்வ மங்களங்களையும் தரும் விரதம் ஆகும். கல்வி, உத்தியோகம், வியாபாரம், திருமணம் முதலானவற்றை எமக்குத் தருவதோடு நோய் நொடியற்ற வாழ்வையும் தரவல்லது.

கேதார கௌரி விரதம் புரட்டாதி மாதம் சுக்ல பக்ஷ தசமி முதல் (05ஆம் நாள்)ஆரம்பமாகி 21 நாள்கள் விரதம் அனுஷ்டித்து ஐப்பசி அமாவாசையுடன் (25 ஆம் நாள்) உபவாசமிருந்து திருக்காப்பு அணிதலுடன் நிறைவுறும் விர–தம் ஆகும்.

12.11.2023ஆம்திகதி(நேற்று)மாலை 3.00 மணி அளவில் அமாவாசை திதி பிறந்தது. அந்த திதி அடுத்த நாள் அதாவது இன்று திங்கட்கிழமை மதியம் 2.30 வரை மணி வரை இருக்கிறது.

இவ்விரதத்தை ஆரம்ப தினத்தன்று சங்கற்பித்து ஆரம்பிப்பது வழக்கம்.

தினமும் வீட்டில் பூஜை வழிபாடு செய்து, மாலையில் விசேஷமாக தேவாலயம் தரிசனம் செய்வது வழிபாட்டு முறையாகும். ஸ்ரீபஞ்சாக்ஷர மந்திர ஜபம்,திருமுறைப்பாராயணஞ் செய்தல் வேண்டும். கேதார கௌரி கதையை படிக்கலாம். அல்லது கோவிலில் மாலை பூஜையின் பின்னர் கதை படிக்கும் போது கேட்டு வணங்கலாம்.

நோயாளிகள் மதிய போசனஞ் செய்து இரவு தேவ தரிசனத்தின் பின் பால் பழம் அருந்தலாம். ஏனையோர் மாலைப் பூஜையின் பின் தானியம், பழம் சாப்பிட்டு விரதத்தை அனுஷ்டிக்கலாம்.

முடிவற்று உபவாசம் இருந்து, பாரணை செய்து, தான தர்மங்களையும் செய்து கேதார கௌரி விரதத்தை மங்களமாக நிறைவு செய்து கொள்ளலாம்.

இவ்விரதத்தை ஆண், பெண் இருபாலாரும் அனுஷ்டிக்கின்றனர். மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்களமாக இருக்க வேண்டியும், மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை (கணவனை) வேண்டியும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

மங்களகரமான வாழ்க்கை வேண்டி ஆண்களும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகள் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சுகளாக இடப்பட்டு, இறுதி நாளன்று அந்நூலை கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும், பெண்கள் தனது இடது கையில் அணிந்து கொள்வர்.

சக்தி ரூபமான பார்வதி தேவி சிவனை நினைத்து விரதம் இருந்து, வழிபட்டு அதன் பலனாக சிவபெருமானின் (இடது பக்க) பாதி உடம்பை பெற்று, அர்த்நாரிஸ்வரியாகவும்,அர்த்த நாரீஸ்வரராகவும் ஒன்றாகி மேற்கொள்ளும் விரதம் கேதார கௌரி விரதமாகும்.

“கேதாரம்” என்பது இமயமலைச் சாரலில் உள்ள ஒரு சிவாலயம். இத்தலத்தில் எழுந்தருளி இருக்கும் சிவனை நினைத்து பார்வதி தேவியாகிய ‘கௌரி’ இவ்விரதத்தை மேற்கொண்டமையால் இப்பெயர் உண்டாயிற்று. சிவனுக்கு சமமான நிலையில் சக்தி அமையும் போது அது பராசக்தி எனப் போற்றப்படுகிறது.

தென்நாட்டு சைவம் எனப் போற்றப்படும் சைவ சித்தாந்தம் கூறும் பரம் பொருள் சிவனாகும். சிவனின் அருள் வேண்டி அனுஷ்டிக்கப்படும் விரதங்கள் பல இருந்த போதிலும் கேதார கௌரி விரதம் பல வகையிலும் சிறப்புடைய விரதமாகக் கொள்ளப்படுகின்றது. பக்தர்கள் இவ்விரதத்தினை மன ஒருமைப்பாட்டுடன், புனித நோக்குடனும் என்ன வரம் வேண்டி அனுஷ்டிக்கிறார்களோ அந்தந்த வரங்களை அம்பாள் வேண்டுகோளுக்கு இணங்க சிவன் மிக விரைவாக கொடுத்து விடுவார் என்பது பலரது அனுபவ உண்மையாகும்.

இதை விட சர்வலோக மாதாவாகிய பார்வதி தேவியே இந்த நோன்பை முதன் முதலில் அனுஷ்டித்து பரம்பொருளின் இடது பாகத்தை பெற்றுக் கொண்டார் என்பதும், இவ் விரதத்திற்கு வழங்கப்படும் அடுத்த சிறப்பாகும். ஆண், பெண் என்ற வேறுபாடு, வயது வேறுபாடு இன்றி, வாழ்க்கையில் எந்த நிலையில் இருப்போரும் இந்நோன்பினை தமக்கு வேண்டிய வரங்களை வேண்டி அனுஷ்டித்து இக, பர இன்பத்தைப் பெற்று இன்புற்று வாழ இது வழி செய்கிறது. இத்தகைய சிறப்புபெற்ற ‘கேதார கௌரி விரதம்’ பற்றி ஓர் புராண வரலாறு உண்டு.

## புராண வரலாறு

கைலயங்கிரியின் சிகரத்தில் நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட சிம்மாசனத்தில் உமதேவி சமேதராய் விளங்கும் பரமசிவன் பக்த கோடிகள் தரிசிக்கும் பொருட்டு தேவசபையில் வீற்றிருக்கின்றார்.

அங்கே தேவ வாத்தியங்கள் முழங்க கிருதாசி, மேனகை முதலிய தேவமாதர்கள் நாட்டியம் ஆடிக்கொண்டிருக்கின்றார்கள். அதில் நடன ஸ்திரீகளில் சவுந்தர்யம் மிக்கவளாகிய அரம்பையானவள் அற்புதமான நடன விசேடங்களை நடித்து காட்டுகிறாள்.

அப்போது அந்தரங்க பக்தராகிய பிருங்கி மகரிஷி பக்தியோடு விசித்திரமான விகட நாட்டியம் ஒன்றை ஆடிக் காட்டுகிறார். பார்வதியும் அங்கே இருக்கின்றாள்.

தேவர்கள் ஆனந்தத்தால் சிரித்து மகிழ்கின்றார்கள். பார்வதக்குகை அச்சிரிப்பொலியால் கலகலவென எதிரொலிக்கின்றது. பரமசிவனும் பிங்கியின் நாட்டியத்தில் மூழ்கித் திளைத்து மகிழ்கிறார். பரமசிவன் அனுக்கிரகமும் பிருங்கி மகரிஷிக்குக் கிடைக்கிறது. அதைக் கண்டு சபையிலுள்ளோர் பிருங்கி மகரிஷியை கௌரவித்துப் பாராட்டுகிறார்கள்.

இவ்வேளை பிரம்மா, விஷ்ணு, தெய்வேந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும், அட்டதிக்குப் பாலகர்களும், முனிவர்களும், பதினெண்ணாயிரம் ரிஷிகள் என்போரும் இருவரையும் மூன்று தடவை பிரதர்சனம் செய்து வணங்கிச் சென்றனர்.

ஆனால் அந்த நேரத்தில் பிருங்கி மகரிஷி வண்டின் உருவம் பெற்று, பரமேஸ்வரனுக்கும், பார்வதி தேவிக்கும் இடையில் சென்று (பார்வதி தேவியை வணங்காது) பரமேஸ்வரனை மட்டுமே 3 தடவை வலம் வந்து பயபக்தியோடு வணங்கினார். (வண்டின் உருவம் பெற்றதால் இம் முனிவர் ‘பிருங்கி முனிகள்’ என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். பிருங்கி என்றால் வண்டு.)

பிருங்கி ரிஷியின் இச்செய்கையைக் கண்டு கோபமுற்ற பார்வதிதேவி, பரமேஸ்வரனிடம் காரணம் கேட்க, பரமேஸ்வரனும் அர்த்தபுஷ்டியான ஒரு புன்முறுவலுடன் பின்வருமாறு கூறினார்.:–

“தேவி! பிருங்கி முனிவர் உலக இன்பத்தை நாடுபவர் அல்லர். மாறாக மோட்சத்தை நாடுபவர். மோட்சத்தை நாடும் அவர் உலக இன்பங்களை நல்கும் உன்னை வணங்காது மோட்சத்தை நல்கும் என்னை வணங்கியதில்

(10ஆம் பக்கம் பார்க்க...)



# இன்று நிறைவடையும் கேதார கௌரி விரதம்

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆச்சரியம் ஒன்றும் இல்லையே தேவி!" – எனக்கூற, இதனைக் கேள்வியுற்ற லோகமாத மேலும் கோபமுற்றாள்.

"எனது சக்தி இல்லாமல் மோட்சத்தை நாடும் உங்கள் பக்தரான பிருங்கி முனிவர் மோட்சத்தை அடைய முடியாது என்பதுடன் இங்கிருந்து ஒரு அடி கூட எடுத்து வைத்து தனது இருப்பிடத்தைக் கூட அண்ட முடியாது. அவ்வாறான சக்தியைக் கொடுக்கும் என்னை ஏளனம் செய்தாய். ஆதலால் நிற்க முடியாமல் போகக் கடவாய்!" என முனிவருக்கு சாபம் கொடுத்தார்.

நிற்க முடியாது சக்தி அனைத்தையும் இழந்த முனிவர் தள்ளாடியவாறே நிலத்தில் விழப் போனார். இந்நிலையில் என் பக்தனைக் காப்பாற்றுதல் என் தர்மம் எனக் கூறி பிருங்கி முனிவரின் கையில் தண்டு (ஊன்றுகோல்) ஒன்றை சிவன் கொடுத்தார்.

தண்டினைப் பெற்றுக் கொண்ட முனிவர் சிறிது சக்தியைப் பெற்றவர் போல் லோகநாயகனுக்கு கோடானு கோடி வணக்கம் என மீண்டும் பரமேஸ்வரனை மட்டும் வணங்கி தனது ஆச்சிரமத்தை அடைந்தார்.

இதனைக் கண்ட லோகமாதாவுக்கு மேலும் கோபம் உண்டாகின்றது. பிருங்கி முனிவர் மட்டுமன்றி தனது கணவரான பரமேஸ்வரனும் தன்னை அவமதித்து விட்டார் என்ற கொடிய கோபத்தில் "மற்றவர்கள் முன்பு என்னை அவமதித்த உங்களுடன் இனி நான் வாழப் போவதில்லை!" – எனக் கூறி கைலையை விட்டு நீங்கிப் பூலோகத்துக்கு வருகிறாள். வால்மீகி மகரிஷி சஞ்சரிக்கிற பூங்காவனத்தில் ஓர் விருட்சத்தின் அடியில் அமர்ந்திருக்கிறாள்.

ஆனால் ஆதிபராசக்தியின் அம்சமான பார்வதி தேவியின் திருப்பாதங்கள் அவ்வனத்தில் பட்டதும், மரஞ் செடி, கொடிகள் எல்லாம் புத்துயிர் பெற்று தளிர்த்தன. மல்லிகை,முல்லை, மந்தாரை, பாரிஜாதம் போன்ற செடிகள் பூத்துக் குலுங்கியமையுடன் அவற்றின் நறுமணம் வனத்தின் நாற்றிசையும் வீசுவதைக் கண்ட வால்மீகி மஹாரிஷி தனது ஞானக் கண்ணால் தனது ஆச்சிரமம் அமைந்துள்ள வனத்தில் பரமேஸ்வரி எழுந்தருளி உள்ளமையைக் கண்டார்.

முனிவர் பார்வதி தேவி எழுந்தருளியுள்ள வில்வமரத்தடிக்கு வந்து, ஆச்சரியத்துடன் தேவியை நோக்கி "மும்மூர்த்திகளிலும் முதற் பொருளே! லோகமாதாவே! முக்கண்ணரின் தேவியே! முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் தேவியே! தாங்கள் பூலோகம் வந்து சிறியோனின் பர்னசாலை அமைந்துள்ள வனத்தில் எழுந்தருளி இருப்பதற்கு யான் என்ன தவம் செய்தேனோ?" எனக் கூறி, அன்னையை மெய்சிலிர்க்க வணங்கி, "தாயே! தாங்கள் பூலோகம் வந்ததற்கான காரணத்தை அடியேன் அறிந்து கொள்வதில் தவறு ஒன்றும் இல்லையே?" என வினாவி மீண்டும் வணங்கி நின்றார்.

அதற்கு பார்வதி தேவி "பிருங்கி முனிவரின் அலட்சியத்தால் கோபமுற்ற நான் பிரியக் கூடாத என் நாதனை விட்டுப் பிரிந்து மிகவும் நீண்ட தூரம் வந்து விட்டேன்!" – எனத் தனது தவறை உணர்ந்து கவலையுடன் கூறினார்.

வால்மீகி முனிவர் பரமேஸ்வரியை தனது ஆச்சிரமத்திற்கு அழைத்துச் சென்று நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட இருக்கையில் அமரச் செய்து தினமும் வணங்கி வந்தார்.

இவ்வேளை பார்வதிதேவியானவள் வால்மீகி முனிவரை நோக்கி "எனது அறிவீனத்தால் என் சுவாமியைப் பிரிந்து இங்கே (தற்போது தென் இந்தியாவில் உள்ள மாங்காட்டு அம்மன் ஆலயம்) வந்து விட்டேன். எனவே இவ்வுலகில் இதுவரை யாரும் அனுஷ்டிக்காத ஒரு விரதத்தினை அனுஷ்டித்து இறைவனை மீண்டும் அடைந்து ஆறுதல் அடைய விரும்புகின்றேன். எனவே, அவ்வாறான விரதம் இருப்பின் கூறுங்கள்!" எனக் கேட்டார்.

அதற்கு வால்மீகி பின்வருமாறு கூறினார்:–

தாயே! இவ்வுலகில் இதுவரை யாரும் அனுஷ்டிக்காத விரதம் ஒன்று உள்ளது. அதனை மெய்யன்புடனும் பயபக்தியுடனும் அனுஷ்டித்தால் விரத முடிவில் பரமேஸ்வரனின் அருள் பூரணமாக கிடைக்கப் பெறுவீர்கள் எனக் கூறி, அத்தகைய சிறப்புப் பெற்றதும் யாராலும் இதுவரை அனுஷ்டிக்கப்படாததுமான விரதம் "கேதார கௌரி விரதம்" எனக் கூறி இவ்விரதத்தின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய விரத நியதிகளை பின்வருமாறு கூறுகின்றார்.

புரட்டாதி மாதம் சுக்கிலபட்ச தசமி தொடக்கம் ஐப்பசி மாதத்துக் கிருஷ்ண பட்சத்துத் தீபாவளித் திருநாளான அமாவாசை வரை 21 நாள்கள் பிரதி தினமும் நீராடி சுத்தமான ஆடை அணிந்து ஆலமரத்தின் கீழ் சிவலிங்கத்தை பிரதிட்டை செய்து 21 வாழைப்பழம், 21 பாக்கு, 21 மஞ்சள், 21 அதிரசம், நோன்பு நூல் என்பவற்றை நைவேத்தியமாகப் படைத்து வழிபடல் வேண்டும் என்று கூறினார். சிவனை மனதில் தியானம் செய்து விதிப்படி வணங்கியதால் 21 ஆம் நாள் அம்பிகையின் விரதத்தில் மகிழ்ந்து அம்பாளின் முன் தேவ கணங்கள் புடைசூழ ரிஷபவாகனத்தில் பூலோகத்தில் அம்பிகையின் முன் காட்சி கொடுத்து தனது இடது பாகத்தை ஈஸ்வரிக்கு கொடுத்து அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் பெற்று கைலாயம் சென்றார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த விரதத்தினை திருமால் அனுஷ்டித்து வைகுந்த பதவியைப் பெற்றதுடன் பிரம்மன் அனுஷ்டித்து உலகைப் படைக்கும் உயர் பதவியினைப் பெற்றார். இந்திரன் அனுஷ்டித்து பொன்னுலகை ஆண்டு வெள்ளை யானையினையும் வாகனமாகக் கொண்டார். இவ்விரதத்தின்

(11ஆம் பக்கம் பார்க்க...)



# இன்று நிறைவடையும் கேதார கௌரி விரதம்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மகிமையை இதுதான் என யாராலும் வரையறுத்துக் கூற இயலாது.

**கேதாரகௌரி விரதம் அனுட்டிக்கும் முறை**

கேதாரகௌரி விரதம் ஆலயத்தில் அனுஷ்டிப்பவர்கள் கேதாரகௌரி விரத ஆரம்பதினத்திலன்று கௌரி அம்பிகை சமேத கேதீஸ்வரநாதரின் சன்னிதானத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கும்பத்தின் முன்பதாக அமர்ந்திருந்து பூசை வழிபாட்டிற்குரிய வலதுகையில் ஞானவிரலாகிய மோதிரவிரலில் தர்ப்பைப் பவித்திரம் அணிந்து சிவாச்சாரியர் மூலம் உங்கள் பிறந்த நட்சத்திரம் பெயர் ஆகியவற்றைக் கூறி குடும்பத்தவர் அனைவரது நன்மைகளுக்காகவும் விரத பூஜைகளை நடாத்துவதாகச் சங்கற்பம் செய்து ஸ்ரீவரசித்தி விநாகர் வழிபாட்டுடன் ஆரம்பித்தல் அவசியமாகும்.

விரத தினங்களிலே பகலில் உணவு, தூக்கம் ஆகியவற்றைத் தவிர்த்து, பழச்



சாறு, பால், நீர்மோர் ஆகியவற்றை மட்டுமே அருந்தி தெய்வசிநதனையுடன் கழித்து, மாலையில் ஆலயத்தில் கௌரி மீனாட்சி சமேதரான கேதீஸ்வரப் பெருமானுக்கு சிறப்பாக நடைபெறும் அபிஷேக ஆராதனைகளிலும், அர்த்த நாரீஸ்வரராக இறைவனுக்கு நடைபெறும் அர்ச்சனை வழிபாடுகளிலும் கலந்துகொள்வதுடன், கும்பத்தில் 21 தினங்களாக பூஜையில் வைக்கப்பட்டுள்ள, இருபத்தொரு இழைகளினால் உருவாக்கப்பெற்றுள்ள நோன்புக்கயிற்றில் இருக்கும் 21 முடிச்சுக்களுக்குமுரிய (கிரந்தி பூஜை) சிறப்பு மந்திரங்களை குரு மூலம் உபதேசமாகக் காதினால் கேட்டு அதனை திரும்ப உங்கள் வாயினால் பக்தியுடன் உச்சரித்து, அதன்பின்னர் சிவ லிங்கப்பெருமானை சிவலிங்காஷ்டக ஸ்தோத்திரத்துடன் கையில் பூவும் நீரும் ஏந்தி பிரதட்சிணம்செய்து கும்பத்துக்கு மலர்சொரிந்துவழிபடுவதுஅவசியமாகும்.

இன்றியமையாத காரணங்களினால் தினமும் வரமுடியாவிடின் இயன்ற தினங்களில் வந்து தவறவிட்ட பிரதட்சிண நமஸ்காரங்களையும் குறைவின்றி நிறைவேற்றிப் பூர்த்தி செய்வது அவசியமாகும். இறுதி நாளன்று பழைய நோன்புக்கயிற்றினை நீக்கிப் புதிய நோன்புக்கயிற்றினை கேதாரிகௌரி ரட்சைக் காப்பாக ஆண்கள் குருமூலம் வலது கையிலும், பெண்கள் குருமூலம் அல்லது கணவர் மூலம் அல்லது சுமங்கலிகள் மூலம் இடது கையில் அல்லது கழுத்தில் அணிந்து கொள்ளலாம்.

அன்றையதினம் பூரணமான உபவாசமாக இருந்து மறுநாள் பாரணம் செய்வது மிகவும் உத்தமம்.

ஒருசிலர் ஆரம்பதினத்தில் வந்து சங்கல்பம்செய்துவிரதத்தைத்தொடங்கிப்பின் இறுதி மூன்று தினங்களில் அனைத்து பிரதட்சிண நமஸ்காரங்களையும் செய்து முடித்து குருவழிபாட்டுடன் நோன்புக் கயிறு வாங்கி அணிவர். பழைய காப்புக் கயிறை நீர் நிலைகளில் போடவும். பெண்களுக்கு இறுதி நாளில் ஆலயத்திற்கு வந்து பூர்த்தி செய்ய இயலாது, மாத விலக்கினால் தடங்கல் ஏற்பட்டால் அசுத்தமான மூன்று தினங்களும் ஒருவேளை உணவுடன் விரதமாக இருந்து நான்காம் நாள் மங்கள ஸ்நானம் செய்து ஆலயத்தில் வந்து பிரதட்சண நமஸ்காரங்களை நிறைவு செய்து காப்பு அணியலாம். இதற்காக இன்னொரு அமாவாசை வரும் வரை காத்திருப்பது அவசியமில்லை.

இவ்விரதத்தைஏனையஒருசிலவிரதங்களைப்போல இத்தனைவருடகாலம் மட்டுமே அனுஷ்டிக்கவேண்டுமென்ற நியதி கிடையாது. தொடர்ந்து அனுஷ்டிக்கும்போது வயோதிபத்தினால் தளர்ச்சியடைந்தவர்களும் நோயுற்று உடல் நலிவடைந்தவர்களும் காலையிலேயே பக்தியுடன் பூஜைவழிபாடுகளை நிறைவேற்றி உச்சிப்பொழுதில் பால் பழம் அதிரசம் பலகாரங்களை உட்கொள்வதும் தவறல்ல.

ஆலயத்திற்குசெல்ல இயலாது இருப்பவர்கள்அல்லதுஆலயம்இல்லாதஊரில் வசிப்பவர்கள் பின்வருமாறு செய்யலாம்.

புரட்டாதி மாதம் சுக்ல பட்ட தசமியில் இவ்விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். இருபத்தோரிழைகள்கொண்டதும்இருபத்தொரு முடிச்சுக்கள் கொண்டதுமான நூலினால் உருவாக்கப்பட்ட மந்திரக் கயிற்றை செய்துகொண்டு அன்றுமுதல் சிவபெருமானை மண்ணால் ஆக்கப்பட்ட விம்பத்திலும், கும்பத்திலும் பூஜித்து இவ்விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். தூய்மையான அழகான இடத்திலே மண்ணால் செய்யப்பட்ட சிவலிங்கத்தை அமைத்து கும்பம் வைத்து பூக்கள், வில்வம் முதலியனவற்றால் அர்ச்சனை செய்யயவேண்டும்.

ஒவ்வொரு நாளும் கேதாரேஸ்வரனுக்கு இருபத்தொரு எண்ணிக்கை கொண்ட அப்பம், வடை, பழம், பாக்கு, வெற்றிலை, பாயாசம், சர்க்கரை அன்னம், புளிஅன்னம் முதலிய நைவேத்தியங்கள் வைத்து, தூபதீபம் காட்டியும் சோடோபோசார பூஜை செய்தும் கேதேஸ்வரனை வழிபடுதல் வேண்டும். இருபத்தொரு நாளும் பூஜையில் வைக்கப்பட்ட இருப்பத்தொரு முடிச்சுக்கள் கொண்ட நூலினை இருபத்தோராவது திதியான அமவாசைத் திதியில் இடது கையில் கட்டிக்கொள்ளவேண்டும்.

தமது ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் தமது குடும்பத்தவரின், ஆயுள் விருத்தி, செல்வ விருத்தி, குடும்ப அன்னியோன்னிய அபிவிருத்தி, மனச்சங்கடங்கள் நீங்கி சந்தோஷம் பெருகவும், குழந்தைகளின் கல்வி, உத்தியோகம் பெறவும், சுபமங்கள திருமணம் கைகூடவும், குழந்தைப் பாக்கியப்பேறுகள் கிட்டவும் இவ்விரதத்தை இயன்றவரை விடாது அனுஷ்டிப்பது உத்தமம் ஆகும்.

– இவ்வாறு கௌதம முனிவர் விரத மஹிமையை உலக மாதாவாகிய கௌரி தேவிக்கு உபதேசம்செய்ய, அதைக்கேட்டு அன்னை கேதாரேஸ்வரப்பெருமானை நினைந்து தவமிருந்து வழிபட, இறைவன் காட்சிகொடுத்து தேவிக்குத் தனது இடப்பாகத்தைக் கொடுத்து தன்னுடன் இணைத்து அர்த்தநாரீஸ்வரனாகி "உமையொருபாகன்" என்னும் சிறப்புத் திருநாமத்தைப் பெற்றார் என்பது வரலாறு.

தேவியின் வேண்டுதலினால் இவ்விரதத்தை அனுஷ்டிக்கும் அனைவருக்கும் தம்பதிகள் சேமமாக இருத்தலும், பிணி நீங்கலும், வறுமை நீங்கி செல்வம் பெறுவதற்கும் கன்னியர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறுவதற்கும் சிவனருளைப் பரிபூரணாகப் பெறுவதற்கும், கணவனும் மனைவியும் கருத்தொருமித்து ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதே இவ்விரத்தின் அடிப்படைத் தத்துவமாகும்.

இவ்விரத முடிவில் 21 இழையினால் ஆன காப்பை ஆண்கள் வலக்கையிலும் பெண்கள் இடக் கையிலும் முழங்கையிற்கும் தோள்பட்டைக்கும் இடையில் கட்டுதல் வேண்டும். மேலும் முதல் 20 நாளும் ஒரு பொழுது சூரிய அஸ்தமனத்தின் பின் உணவருந்தி, இறுதி நாளாகிய சதுர்தசி அன்று உபவாசம் இருந்து மறுநாள் காலை சூரிய உதயத்திற்கு முன்னர் "பாரணம்' பண்ணி விரதத்தை முடித்தல் வேண்டும்.

இவ்விரதத்தினை அனுஷ்டிப்பதால் ஐஸ்வரியம் பெருகும். வறுமையொழியும், நினைத்த காரியம் கை கூடும் என்பது அனுபவ உண்மை. இந்நாளில் அம்பிக்கை சிவனை நோக்கி "எம்பெருமானே இவ்விரத்தை உலகில் யார் செய்தாலும் விரும்பிய யாவற்றையும் பெறுவதற்கு அருள் புரியவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். சிவன் அம்பிகையின் வேண்டுக்கோளை ஏற்று, அங்ஙனமே ஆகுக என்று அருள் புரிந்தார். எனவே நாமும் இவ் அரிய நோன்பினை நோற்று பரம் பொருளின் பூரண கடாட்சத்தினைப் பெற்று "வையத்துள் வாழ் வாங்கு வாழ்வோமாக!'

# விதிகளை மீறி பட்டாசு வெடிப்பு: பொலிஸாரால் 118 வழக்குகள் பதிவு



தீபாவளி பண்டிகை தினமான நேற்று காலை சென்னையில் அனுமதிக்கப்பட்ட நேரத்தைக் கடந்து பட்டாசுகள் வெடித்த குற்றச்சாட்டில் 118 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என தகவல் வெளியாகி உள்ளது.

தீபாவளி பண்டிகையன்று பாதுகாப்பான முறையில் பட்டாசு வெடிக்க பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் அறிவுரைகளை சென்னை பொலிஸார் அறிவுறுத்தியிருந்தனர். தீபாவளி பண்டிகை தினமான நேற்று, உச்ச நீதிமன்ற அறிவுறுத்தலின்படி அனுமதிக்கப்பட்ட சுற்றுச்சூழலுக்கு உகந்த ரசாயனப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட பசுமை பட்டாசுகள் மட்டும் விற்கப்படவும், வெடிக்கப்படவும் வேண்டும் என்று பொலிஸ் அறிவுறுத்தியிருந்தது.

மேலும், காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7 முதல் 8 மணி வரையிலும் என்று 2 மணி நேரங்கள் மட்டுமே பட்டாசு வெடிக்க வேண்டும்.

பட்டாசு வெடிக்கும் இடத்திலிருந்து 4 மீட்டருக்கு அப்பால் 125 டெசிபல் அளவுக்கு மேல்ஓசை எழுப்பக்கூடிய பட்டாசுகளை தயாரிக்கவோ, பயன்படுத்தவோ, விற்கவோ கூடாது. மேலும் தடை செய்யப்பட்ட சீன தயாரிப்பு வெடிகளை விற்பதோ, பயன்படுத்துவதோ கூடாது.

பட்டாசுகளை கொளுத்தி மேலே தூக்கி எறிந்துவிட்டு, வேடிக்கை பார்க்க முயற்சித்தால், வெடிக்கும் பட்டாசு அருகில் இருப்பவர்கள் மீது விழுந்து உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும். ஆகவே, பட்டாசுகளை கொளுத்தி தூக்கி எறிந்து விளையாடக் கூடாது. மக்கள் நடமாடும் இடத்தில் கவனக் குறைவாக பட்டாசுகளை வெடிக்கக் கூடாது, என்பது உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை பொலிஸ் விதித்திருந்தது.

மேலும், விதிமுறைகளை மீறி பட்டாசு வெடிப்பவர்களைக் கண்காணிக்க சிறப்பு தனிப்படையும் அமைக்கப்பட்டிருந்தது. ஒரு உதவி ஆய்வாளர் தலைமையில் இரண்டு காவலர்கள் அடங்கிய தனிப் படைகள் அமைக்கப்பட்டு தீவிர கண் காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில், நேற்று உந்தினம் இரவு முதல் நேற்று காலை வரை, அனுமதிக்கப்பட்ட நேரத்தைக் கடந்து பட்டாசுகள் வெடிக்க செய்தனர் என்ற குற்றச்சாட்டில் 118 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என சென்னை பொலிஸ் தரப்பில் தகவல் வெளியாகி உள்ளது.

அனுமதிக்கப்பட்ட நேரத்தைக் கடந்து பட்டாசு வெடித்தல், 125 டெசிபல் அளவுக்கு மேல்ஓசை எழுப்பக்கூடிய பட்டாசுகளை வெடித்தது, அனுமதி இல்லாத இடங்களில் பட்டாசுகள் வெடித்தது உள்ளிட்ட விதிமுறைகளை மீறியதாக இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என கூறப்படுகிறது. தொடர்ந்து இந்த தனிப்படை போலீஸார், பட்டாசு வெடிப்பவர்களை கண்காணிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என கூறப்படுகிறது.

# சென்னை விமான நிலையத்தின் உள்நாட்டு முனையம் இரண்டாக பிரிப்பு

சென்னை விமான நிலையத்தின் உள்நாட்டு முனையம் டெர்மினல் 1, டெர்மினல் 4 என இரண்டாக பிரிக்கப்பட்டு, நவம்பர் 15 ஆம் திகதி முதல் செயல்பாட்டுக்கு வருகிறது.

சென்னை விமான நிலையத்தில் புதிய ஒருங்கிணைந்த சர்வதேச முனையத்தை, 2.21 லட்சம் சதுர மீட்டர் பரப்பளவில், 2,467 கோடி ரூபா திட்டத்தில் இரண்டு கட்டங்களாக கட்டுவதற்கு, இந்திய விமான நிலைய ஆணையம் கடந்த 2018 ஆம் ஆண்டில் முடிவு செய்து பணிகளை தொடங்கியது. அதில் முதல் கட்ட பணி, 1.36 லட்சம் சதுர மீட்டர் பரப்பளவில், 1,260 கோடி ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

இந்த ஒருங்கிணைந்த சர்வதேச முனையம், டெர்மினல் 2-ஐ கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

புதிய முனையத்தில் விமான சேவை கடந்த ஜூலை 7 ஆம் திகதியில் இருந்து



நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே சர்வதேச முனையமாக செயல்பட்டுக் கொண்டிருந்த டெர்மினல் 3, 4 ஆகியவை முழுவதுமாக மூடப்பட்டன. டெர்மினல் மூன்றை இடிக்கும் பணி நடக்கிறது. அந்த பணி முடிந்ததும், விமான நிலைய இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகள் தொடங்கவுள்ளன.

பழைய சர்வதேச முனையத்தின் டெர்மினல் 4 நல்ல நிலையில் இருப்பதால், அதை இடிக்காமல் கூடுதல் உள்நாட்டு விமான முனையமாக பயன்படுத்த, இந்திய விமான நிலைய ஆணையம் முடிவு செய்தது. அதன்படி, சர்வதேச முனையமாக இருந்த, டெர்மினல் 4-ஐ, உள்நாட்டு முனை யமாக மாற்றி அமைக்கும் பணி கடந்த ஒகஸ்ட் மாதத்தில் தொடங்கி நிறைவடைந்தது.

இதைத் தொடர்ந்து, நவம்பர் 15 ஆம் திகதி இந்த புதிய உள்நாட்டு முனையம் செயல்பாட்டுக்கு வரவுள்ளது. முன்னதாக நவம்பர் 14 ஆம் திகதி புதிய உள்நாட்டு முனையம் டெர்மினல் 4 இல் சோதனை அடிப்படையில் விமானங்கள் தரையிறங்குவது, புறப்படுவது போன்றவை நடைபெறவுள்ளன.

எந்த விமானங்கள் எந்த டெர்மினலில் இருந்து புறப்படும் என்பது பற்றிய அறிவிப்பு பலகைகள், பயணிகள் வசதிக்காக அடுத்தஒரிரு தினங்களில் அமைக்கப்படவுள்ளன. சென்னை உள்நாட்டு விமான நிலையம் டெர்மினல் 1, டெர்மினல் 4 என்று இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளதால், கூடுதல் இடவசதியும் கிடைக்கும். கூடுதல் விமான சேவைகள் இயக்க முடியும் என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# காசாவில் செயலிழந்துள்ள வைத்தியசாலைகள்: இஸ்ரேலின் தாக்குதல் தொடர்பில் ஐ.நா. கவலை



காசாவிலுள்ள 35 இற்கும் அதிகமான வைத்தியசாலைகளில் அரைவாசி செயலிழந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது.

மோதல்களுக்குள் சிக்கியுள்ள வைத்தியசாலைகளில் உள்ள ஊழியர்கள் மற்றும் நோயாளர்களின் பாதுகாப்பு குறித்து பாரிய கரிசனையை வெளியிட்டுள்ளது.

காசா நகரில் உள்ள தமது வைத்தியசாலையின் இதயப் பிரிவு இஸ்ரேலின் தாக்குதலில் அழிக்கப்பட்டுள்ளதாக அல்-ஷிஃபா வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

போதிய மின்சாரம் மற்றும் எரிபொருள் இல்லாத காரணத்தினால் அல் குத்ஸ் மருத்துவமனையும் செயலிழந்துள்ளதாக பாலஸ்தீன செம்பிறைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அல்-ஷிஃபா வைத்தியசாலையில் உள்ள குழந்தைகளை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு இணங்கியுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் அல்-ஷிஃபா வைத்தியசாலையில் இருந்து தெற்கு நோக்கி இடம்பெயர்வதற்கான பாதுகாப்பு வழித்தடத்தை இஸ்ரேல் அறிவித்துள்ளதாக இஸ்ரேலிய இராணுவத்தின் அரபு பேச்சாளர் கூறியுள்ளார்.

இந்த வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை பிரிவில் புதிததாக பிறந்த 20 குழந்தைகள் இருக்கும் நிழற்படம் சர்வதேச ஊடகமொன்றுக்கு அனுப்பட்டுள்ளது.

ஏற்கனவே, மின்சாரம் இன்றிய காரணத்தினால் உரிய காலத்திற்கு முன்னதாக பிறந்த இரண்டு குழந்தைகள் உயிரிழந்துள்ளதாகவும் மருத்துவர்கள் குழுவொன்று கூறியுள்ளது.

எனினும் அல்-ஷிஃபா வைத்தியசாலைக்கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுவதை இஸ்ரேல் ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

வைத்தியசாலைகளுக்கு கீழ் தமது நிலக்கீழ் தளங்களை ஹமாஸ் நிறுவியுள்ளதாகவும் அவை கட்டளை மையங்களாக செயற்படுவதாகவும் இஸ்ரேலிய அரசியல்வாதி ஒருவர் கூறியுள்ளார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை ஹமாஸ் நிராகரித்துள்ளது. அத்துடன் வைத்தியசாலைகள் மீது தாம் தாக்குதல் நடத்தவில்லை என இஸ்ரேல் கூறினாலும் வைத்தியசாலைகளை இலக்குவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளதை ஐக்கிய நாடுகள் சபை உறுதிசெய்துள்ளது.

இந்த தாக்குதல்கள் காரணமாக பல்வேறு வைத்தியசாலைகளுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபை மேலும் தெரிவித்துள்ளது.

காசா நகரிலுள்ள தமது அலுவலகம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ள ஐக்கிய நாடுகள் சபை, இந்த தாக்குதலில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள் உள்ளிட்டவர்கள் பலியாகியுள்ளனர் எனவும் கூறியுள்ளது.

இந்த நிலையில் பொதுமக்களின் உட்கட்டமைப்புகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் வசதிகள் ஆகியன கட்டாயம் பாதுகாக்கப்பட வேண்டும் என ஐ.நாவின் அபிவிருத்தி திட்டத்தின் நிர்வாக அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

# பாலஸ்தீனியர்களுக்கு பிரித்தானியாவில் ஆதரவு: ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 120 பேர் கைது!



காஸாவில் இடம்பெற்று வரும் யுத்த நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கும் நோக்கில் பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக பிரித்தானியாவில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் இதுவரை 120 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 3 லட்சத்துக்கும் அதிகமானோர் வரை இணைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், பாலஸ்தீன கொடியை ஏந்தியவாறு பலர் இந்த பேரணியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



# செவிப்பறை பாதிக்கப்படும் வகையில் சக மாணவனைத் தாக்கிய 4 பேர் கைது



மாணவனில் செவிப்பறை பாதிக்கப்படும் வகையில் தாக்கிய சக மாணவர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நால்வரில் ஒருவர் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் சிறுவர் சீர்திருத்த பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளார். ஏனைய மூவரும் நேற்று மாலை நீதிமன்றில் முற்படுத்தப்பட விருந்தனர்.

கடந்த புதன்கிழமை மாலை யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் நகரில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 13 வயதுடைய மாணவனே தாக்கப்பட்டுள்ளார். அவரது செவிப்பறை பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கை யிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் முறைப்பாடு பதியப்பட்டது. அதனடிப்படையில் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த விசாரணையில் நேற்று முன்தினம் மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரது வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை சிறுவர் சீர்திருத்த பாடசாலையில் தங்க வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அந்த மாணவனின் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலும் மூன்று மாணவர்கள் இன்றைய தினம் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

தனியார் வகுப்புக்கு சென்று வீடு திரும்புகையிலேயே மாணவன் தாக்கப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

# மா ஓயாவில் நீராடச் சென்ற இளைஞனைக் காணோம்

ரம்புக்கனை, போலகம பாலத்திற்கு அருகில், மா ஓயாவில் நீராடச் சென்ற 29 வயதுடைய நபர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நண்பர்கள் குழுவுடன் பிறந்தநாள் விழாவை நடத்துவதற்காக அங்கு சென்ற போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காணாமல் போன இளைஞரை தேடும் பணியை பொலிஸ் கடல் அணிப் பிரிவினரும் கடற்படையினரும் ஆரம்பித்துள்ளனர் என நேற்றுப் பொலிஸார் தெரிவித்தனர்.



# பட்ஜட்டை இறுதி செய்வதில் நேற்று ஜனாதிபதி மும்முரம்!



2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நிதியமைச்சர் என்ற வகையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

வரவு - செலவுத்திட்டத்தின் இறுதிக் கட்ட தயாரிப்பு மற்றும் சமர்ப்பிப்பு தொடர்பாக தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி நேற்றுக் காலை கலந்துகொண்டார்.

நிதி இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஷெஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் ஆலோசகர் சமன் அதாவுதஹெட்டி, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் மதுஷங்க திசாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட உரை இன்று நண்பகல் 12 மணிக்கு நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் ஆற்றப்படவிருக்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சை பொறுப்பேற்றதன் பின்னர் சமர்ப்பிக்கும் இரண்டாவது வரவு செலவு திட்டமாகும் இது.

இம்முறை வரவு - செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு, வசதி குறைந்த மக்களுக்கு நிவாரண திட்டங்கள், தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் வசதிகள் என பல முன்மொழிவுகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் அரசாங்கத்துக்கு வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வரி அதிகரிப்பும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் வரவு - செலவுத்திட்ட விவாதம் நாளை செவ்வாய்க்கிழமை 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஞாயிறு தினங்கள் தவிர்ந்து 7 நாள்கள் இடம்பெறவுள்ளது.

அத்துடன், வரவு செலவுத்திட்ட இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதனையடுத்து, குழுநிலை விவாதம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை முதல் டிசம்பர் 13 ஆம் திகதி புதன்கிழமை வரை ஞாயிறு தினங்கள் தவிர்ந்து 19 நாள்கள் இடம்பெறவுள்ளது.

அதற்கமைய, 2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத்திட்ட மூன்றாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 13 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதேவேளை, 2024 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்தினால் சமர்ப்பிக்கப் பட்டது தெரிந்ததே.

# பெரிய சம்பள உயர்வை இன்று எதிர்பார்க்காதீர்!

## ஓய்வூதியம் ஓரளவு அதிகரிக்கலாமாம்

அரச உத்தியோகத்தர்களை இன்றைய வரவு - செலவுத் திட்டத்தின் போது பெரிய சம்பள உயர்வை எதிர்பார்க்க வேண்டாம் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2024ஆம் ஆண்டில் பெரிய பொருளாதார மறுமலர்ச்சியை எதிர்பார்க்க முடியாது எனவும், அடுத்த வருடம் தற்போதைய நிலையை விட கடினமாக இருக்கலாம் எனவும், எனவே அடுத்த வருடத்தில் அதிக நம்பிக்கை வைக்க வேண்டாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

1,400 பில்லியன் கடன் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளுக்காகவும் அதிக பணம் மீள்செலவினமாக (recurring expenditure) வைத்திருக்க வேண்டியுள்ளது எனவும், சம்பளத்திற்காக 1,107 பில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அரச உத்தியோகத்தர்கள் பெரிய சம்பள உயர்வை எதிர்பார்க்க வேண்டாம் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஓய்வூதியத்திற்காக 386 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதன்படி ஓய்வூதியம் ஓரளவு அதிகரிக்கலாம் எனவும் அவர் கூறுகிறார்.

அடுத்த வருடம் (2024) அரச வருமானம் 4,127 பில்லியன் ரூபாவாக இருக்கும் எனவும், 3,820 பில்லியன் ரூபாவை வரியாகப் பெற எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

அதன்படி, வரும் ஆண்டு தற்போதைய சூழ்நிலையை விடக் கடினமாக இருக்கும் என்றும், மக்கள் தங்கள் வருமானத்தின் முக்கிய பகுதியை நேரடி அல்லது மறைமுக வரிகளாக செலுத்த வேண்டியிருக்கும் என்றும் அவர் வலியுறுத்துகிறார்.



# மாரவிலவில் சூட்டுச் சம்பவம்

புத்தளம் – மாரவில பகுதியில் நபர் ஒருவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேலும் ஒருவர் கூறிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புத்தளம் – மாரவில வடக்கு கடற்கரை பகுதியில் நேற்று இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பண்டாரவத்தை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் ஒருவரே துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கபட்டுள்ளார்.

அத்துடன், மாரவில பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய நபர் ஒருவரே கூறிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் எனக் கூறப்படும் நபரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மீன் கொள்வனவில் ஈடுபட்டிருந்த நபர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் இந்தச் சம்பவத்திற்கு காரணம் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.



# நாட்டில் மின்னுற்பத்தி வலு 58 சத வீத்தால் அதிகரிப்பு

இலங்கையில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக நாட்டில் உள்ள மின்னுற்பத்தி நிலையங்களின் மின்னுற்பத்தி 58 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நீர் மின்னுற்பத்தி நிலையங்களைச் சார்ந்த நீர்த் தேக்கங்களின் கொள்ளளவு 84 சதவீதத்தை கடந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியிலாளர் நோயெல் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, தேசிய மின் கட்டமைப்பில் அனல் மின் நிலையங்களின் பங்களிப்பு குறைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் 2024 முற்பகுதியில் சமர்ப்பிப்பாம்!

2024 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சட்டமூலம் தொடர்பாக சிவில் மற்றும் இதர தரப்புக்களுடன் கலந்துரையாடும் செயற்பாடுகளுக்காக அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்நடவடிக்கை தாமதப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை தற்போது அந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு, அவர்களின் அபிப்பிராயங்கள் மற்றும் முன்மொழிவுகள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டே வரைவு இறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலாக இந்தச் சட்ட மூலம் கொண்டு வரப்படுகின்றது.

## மாலைதீவுவாசி ஒருவர் ரிவோல்வருடன் கைது



மாலைதீவுப் பிரஜை ஒருவர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு இலங்கையில் இருந்து மாலைதீவுக்குச் செல்லவிருந்த விமானத்தில் இருந்து புறப்படுவதற்காக இந்த நபர் வந்துள்ளார்.

அவரது பொருள்களைச் சோதனை செய்து பார்த்ததில் ரிவோல்வர் போன்ற துப்பாக்கி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட மாலைதீவு பிரஜை 58 வயதானவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலையப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்



கொழும்பு மாநகரசபை எல்லைப் பகுதிகள், கம்பஹா, களுத்துறை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல் போன்ற பகுதிகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனை முன்னிட்டு, நேற்று முதல் 5 நாள்களுக்கு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர், வைத்தியர் நளின் ஆரியரத்ன கூறியுள்ளார்.

தற்போது நிலவும் மழையுடனான வானிலையால், எதிர்வரும் நாள்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மாதத்தில் மாத்திரம் நாட்டில் 2300 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.11.2023




இன்று ஆக்கப்பூர்வமான நாளாக அமையும். நீங்கள் புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் இன்று உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் உற்சாகத்துடன் சிறப்பாக பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்புணர்வுடன் நடந்துகொள்வீர்கள். இருவரும் உறவின் மதிப்பை உணர்ந்து ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்துவீர்கள்.

இன்று உங்களின் பணத் தேவைகள் பூர்த்தியாகலாம். உங்கள் சேமிப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாளின் போக்கைக் கண்டு நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். உங்கள் கனவுகளும் விருப்பங்களும் நிறைவேறும். தொலை தூரத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கப்பெறுவீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள். தொழில் சம்பந்தமான பயணம் மேற்கொள்வீர்கள்.

உங்கள் வாழ்க்கைத் துணையிடம் நீங்கள் மிகவும் அன்பாக நடந்து கொள்ள முயற்சிப்பீர்கள். உங்கள் உறவு சிறப்பாகும். இருவரும் மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் இருப்பீர்கள்.

உங்களிடம் அதிக அளவில் பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். அது உங்களுக்கு மன நிறைவைத் தரும்.

இன்று கண் சம்பந்தமான பிரச்சினைகளும் முதுகு வலியும் ஏற்படலாம்.




உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் தேவை. வேகத்தை தவிர்க்க வேண்டும். சிறப்பாக திட்டமிட்டால் நல்ல பலன்களைப் பெறலாம்.

அமைதியாகவும் எதிலும் தலையிடாமல் இருப்பதன் மூலம் உணர்ச்சிவசப்படாமல் இருக்க உதவும். பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரும். என்றாலும் உங்கள் திறமை மூலம் சமாளிக்கலாம். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் தேவைகளை புரிந்துகொண்டு நடந்து கொள்ளுங்கள். உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையை ஏமாற்றாமல் இருக்க முயலுங்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படலாம். நிதி நிலையை கண்காணிப்பதன் மூலம் ஸ்திர நிலையைக் காணலாம்.




நீங்கள் இன்று செய்யும் எந்தச் செயலிலும் நம்பிக்கையும் உறுதியும் தேவை. இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லாத போதிலும் உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மனதில் எதிர்மறை எண்ணம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று அதிகப்படியான பணிகளை சந்திக்க நேரலாம். பணிகளை ஒழுங்குபடுத்தி முன்னுரிமைப்படி செய்தால் குறித்தநேரத்தில் முடிக்க இயலும். இதனால் பணியில் மனநிறைவைப் பெறலாம்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையில் இடைவெளி அனுமதிக்காதீர்கள். இன்று நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படலாம். இந்தப் போக்கை தவிர்ப்பது நல்லது. உங்கள் துணையுடன் நட்போடு நடந்துகொள்ளுங்கள்.




உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள். இதனால் வெற்றி பெற்ற மனிதராக ஆவீர்கள்.

இன்றைய வெற்றியின் ரகசியம் சிறந்த திட்டமிடல் ஆகும். அட்டவணையிட்டு பணி செய்தால் பணிகளை சுமூகமாக செய்ய இயலும்.

உங்கள் துணையிடம் பொறுமையாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் உறவை நல்லுறவாக்க இது மிகவும் அவசியம்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியமாய் இருக்க உடற்பயிற்சியும் தியானமும் அவசியம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.




முன்கூட்டிய திட்டமிடலும் கவனமும் இன்று மிகவும் அவசியம்.பிரார்த்தனை இன்று நல்ல பலன் தரும்.

இன்று சிறந்த பலன்களைக் காண்பதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். உங்கள் முயற்சியில் நேர்மை தேவை.

உங்கள் துணையைப் புரிந்துகொண்டு அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். அன்பை ஒருவருக்கொருவர் கொடுத்துப் பெறுவதன் மூலம் உறவு சுமூகமாக இருக்கும்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இதனால் மகிழ்ச்சியின்மை காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் வேண்டும்.




உங்கள் தைரியம் மற்றும் உறுதி காரணமாய் வெற்றி கிடைக்கும். நீங்கள் செய்யும் செயல்களை நம்பிக்கையுடன் செய்யுங்கள். அமைதியாய் இருக்க இசை கேளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கையாள்வது எப்படி என்று தெரிந்து கொள்ளுங்கள். இது உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அமர்ந்து பேசுங்கள். இருவரும் கலந்து பேசுவதன் மூலம் உறவின் தேவையை புரிந்து கொள்ள முடியும்.

பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம். நிதிநிலையை கண்காணிப்பதன் மூலம் பண இழப்பை தடுக்கலாம்.

பதட்டத்தை தள்ளி வைப்பதன் மூலம் நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் ஃ மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.11.2023




இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாக குறித்த நேரத்திற்கு முன் முடிப்பீர்கள்.

பணியில் புதிய மைல் கல்லை அடைவீர்கள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் பணியை நீங்கள் கையாளும் விதத்தையும் உங்கள் வேகம் மற்றும் துல்லியத்தையும் உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சந்திப்புகளும் இணைந்து செயல்படுவதும் மகிழ்ச்சியை அதிகரிக்கும்.

இன்று உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு பணப்புழக்கம் காணப்படும். உங்கள் சேமிக்கும் திறன் அதிகரிக்கும்.




நீண்ட கால திட்டங்ககளை அமைப்பது அவசியம். இன்று வாழ்வின் சௌகரியங்களுக்கு பணம் சம்பாதிப்பீர்கள். இன்றைய சம்பவங்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள்பணியில்மகிழ்ச்சியும்திருப்தியும் காணப்படும். உங்கள் பணியில் உற்சாகத்தைக் காண்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நீங்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். திரைப்படம் காண அல்லது பொழுதுபோக்க என வெளியிடங்களுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

வீட்டில் சுப நிகழ்சிகளுக்காக பணம் செலவு செய்வதில் மகிழ்ச்சி காண்பீர்கள். பணத்தை உரிய முறையில் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.




இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும். இதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும். தேவையற்ற ஏமாற்ற உணர்வுகளை தவிர்த்திடுங்கள்.

பணியில் உங்களின் நிஜமான திறமையை காண்பிப்பீர்கள். பணிகளை கவனமாகக் கையாண்டால் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்ளுங்கள். நச்சரிக்கும் வகையில் எதையும் கூறாதீர்கள். அவருடன் அதிக நேரம் செலவிடுங்கள்.

செலவுகள் அதிகமாக காணப்படும். என்றாலும் இன்று பணத்தை திறமையாக கையாண்டால் இன்றைய நாள் சுமூகமாக இருக்கும்.

இன்று பதட்டமுடன் காணப்படுவீர்கள். இதனால் தலைவலி ஏற்படலாம்.




இன்று கவனமாகவும் சாமார்த்தியமாகவும் செயல்களை செய்ய வேண்டும். சிறு கவனச் சிதறல் காரணமாகக் கூட தவறுகள் நேரலாம்.

உங்கள் பணிகள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெரும் அளவிற்கு இருக்காது. மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்தால் விரைவில் பாராட்டைப் பெற இயலும்.உங்கள் பணிகளின் தரத்தை எதிர்மறை எண்ணங்கள் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று முக்கியமான விஷயங்களைப் பற்றி உங்கள் துணையிடம் பேசாதீர்கள். சாதாரணமாகப் பேசுங்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண இது மிகவும் அவசியம்.

அதிகரிக்கும் செலவுகளைக் கண்டு கவலை கொள்ளாதீர்கள். பணம் பயனுள்ள வகையில் செலவாகும். எனவே கவலை வேண்டாம்.









# தம்பட்டை லெவன் ஸ்டார் கிரிக்கெட் தொடரில் சம்பியனானது சம்பியன் விளையாட்டுக்கழகம்

**- அஸ்ஹர் இப்றாஹிம் -**

தம்பட்டை லெவன் ஸ்டார் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில், விநாயகபுரம், விநாயகர் விளையாட்டுக் கழக அணியை வீழ்த்தி அக்கரைப்பற்று சம்பியன் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

தம்பட்டை லெவன் ஸ்டார் விளையாட்டுக் கழகம் அணிக்கு 11 பேர் கொண்ட கிரிக்கெட் தொடரை நடத்தி வந்தது. இதில், 48 கழகங்கள் பங்கேற்றிருந்தன.

இந்தத் தொடரில் ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த, அக்கரைப்பற்று சம்பியன் விளையாட்டுக்கழகம், காலிறுதிப் போட்டியில் திருக்கோவில் எதிரொலி விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தியது.

பின்னர் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் தம்பட்டை லெவன் ஸ்டார் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் விநாயகபுரம், விநாயகர் விளையாட்டுக்கழகத்தையும் வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. அந்த அணிக்கு கிண்ணத்துடன் 40 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டது.

இப்போட்டியில் சிறப்பாட்டக்காரராக அக்கரைப்பற்று சம்பியன் விளையாட்டுக்கழக வீரர் அலெக்ஸ் சுஜீ தெரிவு செய்யப்பட்டார்.






# வழித்துத் துடைத்தது இந்தியா

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்திய அணி நெதர்லாந்தையும் வென்றதன் மூலம், அந்த அணி எதிர்கொண்ட எந்த வொரு போட்டியிலும் தோல்வியடையா மல் ஒன்பதாவது வெற்றியைப் பெற்றுள்ளது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதுவரை நடந்து முடிந்த லீக் போட்டிகளின் அடிப்படையில், இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து ஆகிய அணிகள் அரை யிறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள் ளன.

இந்நிலையில், இந்தத் தொடரின் 45ஆவது மற்றும் கடைசி லீக் ஆட்டம் பெங்களூரில் நேற்று நடைபெற்றது.

இதில், இந்தியா – நெதர்லாந்து அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, 50 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 410 ஓட்டங்களைக் குவித்தது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத் தில், ரோஹித் சர்மா (61), சுப்மன் கில் (51), விராட் கோலி (51) ஆகியோர் அரைச் சதங்களை அடிக்க, ஸ்ரேயாஸ் ஐயர் (128- ஆட்டமிழக்காமல்), கே.எல். ராகுல் (102) ஆகியோர் சதங்களைக் கடந்த னர்.

நெதர்லாந்து சார்பாக பந்துவீச்சில், பாஸ் டி லீடே 2 விக்கெட்டுகளை வீழ்த்தி னார்.

பின்னர் 411 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நெதர்லாந்து அணி, இந்தியப் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் சீரான

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 9 | 9 | 0 | 0 | 0 | 18 | 2.570 |
| 02 | தென்னாபிரிக்கா | 9 | 7 | 2 | 0 | 0 | 14 | 1.261 |
| 03 | அவுஸ்திரேலியா | 9 | 7 | 2 | 0 | 0 | 14 | 0.841 |
| 04 | நியூஸிலாந்து | 9 | 5 | 4 | 0 | 0 | 10 | 0.743 |
| 05 | பாகிஸ்தான் | 9 | 4 | 5 | 0 | 0 | 8 | -0.199 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 9 | 4 | 5 | 0 | 0 | 8 | -0.336 |
| 07 | இங்கிலாந்து | 9 | 3 | 6 | 0 | 0 | 6 | -0.572 |
| 08 | பங்களாதேஷ் | 9 | 2 | 7 | 0 | 0 | 4 | -1.087 |
| 09 | இலங்கை | 9 | 2 | 7 | 0 | 0 | 4 | -1.419 |
| 10 | நெதர்லாந்து | 9 | 2 | 7 | 0 | 0 | 4 | -1.825 |

இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தனர்.

இறுதியில், 47.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 250 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது.

இதன் மூலம் இந்திய அணி 160 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

நெதர்லாந்து அணி சார்பாக துடுப் பாட்டத்தில், அதிகபட்சமாக தேஜா நிட மானுரு 54 ஓட்டங்களையும், சைப்ரண்ட் ஏங்கல்பிரெக்ட் 45 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில் ஜஸ்பிரித் பும்ரா, முகமது சிராஜ், குல்தீப் யாதவ், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ரோஹித் சர்மா மற்றும் விராட் கோஹ்லி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

ஆட்டநாயகனாக இந்தியாவின் ஸ்ரேயாஸ் ஐயர் தெரிவானார்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரின் கடைசி லீக் ஆட்டமாக இந்த ஆட்டம் அமைந்தது. இந்திய அணி இதுவரை எந்தவொரு தோல்வியையும் அடைய வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியுடன் லீக் ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில், அரையி றுதியாட்டங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 15ஆம் திகதி நடை பெறவுள்ள முதலாவது அரையிறுதி யாட்டத்தில், லீக் போட்டிகளின் அடிப் படையில் புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடிந்த இந்திய அணியுடன், நான்கா வது இடத்தைப் பிடித்த நியூஸிலாந்து மோதவுள்ளது.

பின்னர் 16ஆம் திகதி நடைபெற வுள்ள இரண்டாவது அரையிறுதியில், புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடம் பிடித்த தென்னாபிரிக்காவும் மூன்றாவது இடம்பிடித்த அவுஸ்திரேலியாவும் மோத வுள்ளன.